செ.வெ.எண்:06-2020 நாள்:03.09.2020

# விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகைபுரிவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகைபுரிவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று (03.09.2020) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகைபுரிவதையொட்டி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் விழாவினில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்தும், விழுப்புரம் மாவட்டத்தில் இதுவரை முடிவுற்ற திட்டப்பணிகள் குறித்தும், புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டி தொடங்குவது குறித்தும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் பற்றியும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் விரிவாக கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து விழுப்புரம் நகராட்சி பூந்தோட்டம் குளம் சீரமைப்பு மற்றும் பூங்காவுடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணிகள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவருவதை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் சுகாதாரத்துறை சார்பாக கொரோனா தடுப்பு நடவடிக்கையாக அவசர பணிகளுக்கு புதிதாக இரண்டு 108 வாகனங்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வினில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஆர்.முத்தமிழ்ச்செல்வன், நகராட்சி ஆணையர் திரு.தட்சிணாமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்